

கோவை கொடீசியா அருகில் உள்ள ஜே.ஆர்.ஹாலில் நடைபெற்ற திமுக விளையாட்டு மேம்பாட்டு அணியின் மண்டல அளவிலான அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் கலந்துரையாடல் கூட்டத்தில் அமைச்சர் சு.முத்துசாமி, கழக விளையாட்டு மேம்பாட்டு அணியின் செயலாளர் தயாநிதி மாறன் எம்பி., ஆகியோர் சிறப்புரையாற்றினர். உடன் கோவை மாநகர் மாவட்ட திமுக செயலாளர் நா.கார்த்திக், வடக்கு மாவட்டச் செயலாளர் தொ.அ.ரவி, தெற்கு மாவட்டச் செயலாளர் தளபதி முருகேசன், பொள்ளாச்சி ஈஸ்வரசாமி எம்பி., ஆகியோரும் பேசினர். இதில் மு.வாசிம்ராஜா வரவேற்புரையில், மாநகர் மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் எம்.எம்.சஞ்சய்குமார் தலைமையில், வடக்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் தொ.மு.தியாகராஜன், தெற்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் ந.ஜெகதீஸ்வரன் முன்னிலையில் நடைபெற்ற இந்நிகழ்வில், கல்பனா செந்தில், எஸ்எம்பி முருகன், எஸ்.ஆர். பார்த்திபன், கார்த்திக், வே.நம்பி, நிவேதா ஜெசிகா, கோபால் ராம், மனோகரன், கௌதமன், ஏர்போர்ட் ராஜேந்திரன், இரா.வெற்றிச்செல்வன், அசோக் ஆறுக்குட்டி, துரை. செந்தமிழ்செல்வன், ஏ.எஸ்.நடராஜ் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

## செஸ் ஒலிம்பியாட்:

# இந்திய ஆண்கள் - பெண்கள் அணி தங்கம் வென்று சாதனை!

புடாபெஸ்ட், செப்.23

45வது செஸ் ஒலிம்பியாட் போட்டி ஹங்கேரி தலைநகர் புடாபெஸ்டில் நடந்து வருகிறது. இதில் இன்று நடைபெற்ற இறுதி சுற்றில் இந்திய ஆண்கள் அணி ஸ்லோவோனியாவை எதிர்கொண்டது. இதில் இந்தியா தரப்பில் குகேஷ் மற்றும் அர்ஜுன் ஆகியோர் வெற்றி பெற்றனர். இதன் மூலம் இந்திய ஆண்கள் அணி செஸ் ஒலிம்பியாட் வரலாற்றில் முதல் முறையாக தங்கப்பதக்கம் வென்று சாதனை படைத்துள்ளது.

ஸ்ரீநாத் நாராயணன், குகேஷ், பிரக்ஞானந்தா, அர்ஜுன் எரிகைசி, விதித் மற்றும் பெண்டாலா ஆகியோர் அடங்கிய இந்திய ஆண்கள் அணி தங்கப்பதக்கம் வென்று அசத்தியுள்ளது. இதேபோல் இந்த தொடர் முழுவதுமே சிறப்பாக விளையாடி வந்த அபிஜித் தலைமையிலான இந்திய மகளிர் அணி இறுதிச்சுற்று ஆட்டத்தில் அஜர்பைஜானுக்கு எதிராக விளையாடியது. இதில் திவ்யா, வந்திகா மற்றும் ஹரிகா ஆகியோர் வெற்றி பெற்று இந்திய அணி தங்கப்பதக்கம் வெல்ல உதவினர்.

திவ்யா, வந்திகா, ஹரிகா, தானியா மற்றும் அபிஜித் (கேப்டன்) ஆகியோர் அடங்கிய இந்திய மகளிர் அணி தங்கப்பதக்கம் வென்று அசத்தியுள்ளது. வரலாற்றில் முதல் முறையாக இந்திய மகளிர் அணியும் தங்கம் வென்று சாதனை படைத்துள்ளது.



சென்னை வடக்கு மாவட்டம் ஆர்.கே.நகர் மேற்கு பகுதி திமுக சார்பில் பொது உறுப்பினர்கள் கூட்டம் பகுதி செயலாளர் எஸ்.ஜெபதாஸ்பாண்டியன் ஏற்பாட்டில் மாஸ் டி.வெங்கடேசன் தலைமையில் எம்.லோகநாதன், டி.திராவிடசெல்வி, பி.ஸ்ரீனிவாசன், ஆகியோர் முன்னிலையில் நேதாஜி யு.கணேசன் எம்.சி, எஸ்.எல். சுந்தர், கே.தேவன், ஆர்.எ.எம்.சசிகுமார், ஜி.ஏழுமலை, ஆர்.ராஜன், ஏ.மணிமேகலை, ஆகியோர் வரவேற்பில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கழக அமைப்பு செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ, டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி, ஜே.ஜே.எபினேசர் எம்.எல்.ஏ, ஆகியோர் சிறப்புரையாற்றினர். மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், பகுதி அணிகளின் நிர்வாகிகள், வட்ட நிர்வாகிகள், பாக முகவர்கள், பாகபணியாளர்கள், சார்பு மன்ற நிர்வாகிகள், கழக உறுப்பினர்கள் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.மு. கோவிந்தராஜ், நன்றி கூறினார்.

## 45வது 'செஸ் ஒலிம்பியாட்'டில் இந்தியா தங்கம் வென்று சாதனை!

# வரலாற்று வெற்றியைப் பெற்றுள்ள இந்திய அணிக்குப் பாராட்டுகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் - சமூக வலைதளப் பதிவு!

சென்னை, செப்.23-

45-ஆவது 'செஸ் ஒலிம்பியாட்'டில் ஆண்கள், பெண்கள் என இரு பிரிவிலும் இந்தியா தங்கம் வென்றுள்ளதையடுத்து, முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள சமூக வலைதளப் பதிவில், "வரலாற்று வெற்றியைப் பெற்றுள்ள இந்திய அணிக்கு எனது பாராட்டுகள்!" என்று குறிப்பிட்டுள்ளார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைத்தளப் பதிவு வருமாறு:-

**இந்தியா தொடர்ந்து உயர்கிறது, ஒளிர்கிறது!**

**சென்னையில் நாம் மிகச் சிறப்பாக நடத்திக் காட்டிய செஸ் ஒலிம்பியாடைத் தொடர்ந்து, தற்போதைய 45ஆவது செஸ் ஒலிம்பியாட், புதாபெஸ்த் 2024இல் ஆண்கள் பிரிவு, பெண்கள் பிரிவு என இரண்டிலும் தங்கம் வெல்லும் அளவுக்கு இந்திய அணி பயணித்துள்ளது!**

**தங்கள் எல்லைகளைத் தொடர்ந்து அகலப்படுத்தி, இடைவிடா அர்ப்பணிப்புடன் நமது செஸ் சாம்பியன்கள் உலக அரங்கில் நமது நாட்டுக்குப் பெருமை தேடித் தருவதைக் காண்பது நெஞ்சுக்கு இதமளிக்கிறது.**

**வரலாற்று வெற்றியைப் பெற்றுள்ள இந்திய அணிக்கு எனது பாராட்டுகள்!**

இவ்வாறு அப்பதிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

## எல்.சீனிவாசன் தலைமை! செந்தில் குமார் - வே.சிவகுமார் பங்கேற்பு!

# இராயபுரம் 49வது வட்ட பொது உறுப்பினர்கள் கூட்டம்!

## ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ. - ஐட்ரீம் மூர்த்தி எம்.எல்.ஏ. சிறப்புரை!

சென்னை, செப்.23-

சென்னை வடக்கு மாவட்டம் இராயபுரம் கிழக்குப் பகுதி 49-வது வட்டக் கழகத்தின் சார்பில் பொது உறுப்பினர்கள் கூட்டம் வட்ட செயலாளர் எல். சீனிவாசன் தலைமையில் பகுதி செயலாளர் செந்தில் குமார், பொதுக்குழு உறுப்பினர் வே.சிவகுமார் முன்னிலையில் நடைபெற்றது.

சென்னை வடக்கு மாவட்ட செயலாளர் ஆர். டி.சேகர் எம்.எல்.ஏ. சிறப்புரையாற்றினார்.

மேலும் மாவட்ட கழகத்தின் சார்பில் ஏழு தீர்மானங்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன. அத்தீர்மானங்கள் வருமாறு:-

நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் 40க்கு 40 வெற்றியை ஈட்டி தந்த கழகத் தலைவர் முதல்வர் அவர்களுக்கு தனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம்.

பார்முலா போர் கார் பஞ்சாயத்தை வெற்றிகரமாக நடத்திட்ட இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு துறை அமைச்சர் இளைஞரணி செயலாளர் இளம் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு கூட்டம் தனது வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறது.

வாக்காளர் பட்டியல் சரி பார்த்தல், புதிய வாக்காளர்களை சேர்த்தல் ஆகிய பணிகளையும் இல்லந்தோறும் இளைஞரணி உறுப்பினர் சேர்த்தல் ஆகிய பணிகளையும், வட்ட சார்பு மன்றங்கள், இளைஞர் அணி மன்றங்கள் ஆகியவற்றை அமைத்தல், அனைத்து இடங்களிலும் கழகக் கொடிகளை அமைத்தல் மற்றும் கழகத் தலைவர் அவர்கள், கலைஞர் அவர்கள், பேரறிஞர் அண்ணா, முப்பெரும் விழா, இளந்தலைவர் உதயநிதி ஸ்டாலின் ஆகியவர்களின் பிறந்தநாள் விழாக்களை நடத்துவது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரீம்ஸ் ஆர்.மூர்த்தி, மாவட்ட துணை செயலாளர் கமலக்கண்ணன், நாகம்மை கருப்பையா, பி.டி.பாண்டி செல்வம், தா. இளைய அண்ணா மற்றும் ஏ.வேணுகோபால், என்.ஏழுமலை, தா.ஜெயபால், பீ. சேகர், எம்.பழனி, எம்.வி. நசுமணி, குமார், கே.ஆர்.கோபிநாத், ஜி. கோதண்டராமன், பா.சுதாகர், பன்னீர்செல்வம், பாஸ்கர், எஸ்.ராஜசேகரன், ஆர். பாரதிதாசன், ஜி.விநாயகமூர்த்தி, கன்னியப்பன், கா.பாலகிருஷ்ணன், எம். தங்கராஜ், கலைச்செல்வன், ஜி.வனிதா மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

மாவட்ட பிரதிநிதி கா.கலைச்செல்வன் நன்றி கூறினார்.

## உலக நாடுகளுக்கெல்லாம் முன் உதாரணமாக

# திராவிட மாடல் அரசின் 'காலை சிற்றுண்டி திட்டம்' விளங்குகிறது!

## அமைச்சர் செஞ்சி மஸ்தான் பெருமிதம்!



கள்ளக்குறிச்சி, செப்.23-

கள்ளக்குறிச்சியில் உள்ள ஏ.எல்.சி சமுதாயக் கூடத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற தமிழ்நாடு கிறிஸ்தவ சபைகள் கூட்டமைப்பின் கள்ளக்குறிச்சி மாவட்ட அறிமுக விழாவில்,தெற்கு மற்றும் வடக்கு மாவட்ட கழக செயலாளர்கள் வசந்தம் க.கார்த்திகேயன் எம்.எல்.ஏ, தா.உதயசூரியன் எம்.எல்.ஏ ஆகியோர்தலைமையில், நாடாளுமன்ற உறுப்பினர் தே.மலையரசன் முன்னிலையில் சிறுபான்மை துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ்.மஸ்தான் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டார்.

மேற்கொண்டு அமைச்சர் செஞ்சி மஸ்தான் பேசுகையில் நமது திராவிட மாடல் அரசு எல்லோருக்கும் எல்லாம் கிடைக்க வேண்டும் என்ற உயரிய நோக்கத்தில் செயல்பட்டு வருகிறது,அதற்கு ஒரு உதாரணம் காலை சிற்றுண்டி திட்டம் கனடா நாட்டில் அந்நாட்டின் அதிபர் பள்ளிகளில் காலை உணவு திட்டத்தை செயல்படுத்துகிறார், பிறகு அதன் செய்தியாளர் சந்திப்பில் தெரிவிக்கும் போது இந்தியாவில் அதுவும் தமிழ்நாட்டில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கொண்டு வந்த காலை சிற்றுண்டி திட்டம் தான் இந்த திட்டம் என்று தெரிவித்தார்,ஆகவே உலக நாடுகளுக்கு எல்லாம் முன் உதாரணமாக நமது காலை சிற்றுண்டி திட்டம் விளங்குகிறது என்று பெருமிதமாக பேசினார், மேலும் 2000 ஆண்டுகளுக்கு முன் அயன் திருவள்ளுவர் எழுதிய திருக்குறளை செவி சாய்த்து அதனை திட்டமாக செயல்படுத்துகின்ற காலம் முத்தமிழ் அறிஞர் கலைஞருடைய நூற்றாண்டு காலம், கலைஞர் அவர்கள் தான் சிறுபான்மை மக்களுக்கு அரனாக இருந்தவர் என்பது உங்களுக்கே தெரியும்,பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார் ஒன்றே குலம் ஒருவனே தேவன்,ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம், அண்ணா அவர்கள் முதலமைச்சராக பொறுப்பேற்ற பின்னர்,தாழ்ந்து கிடந்த தமிழகத்தை தலை நிமிர வைப்பதற்காக நாம் அனைவரும் ஒன்றாக பயணித்து ஏழ்மையிலே, வறுமையிலே ,இல்லாமையிலே கல்லாமையிலே ,அறியாமையிலே இருக்கின்ற தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட மக்களை கல்வியின் மூலமாக சம நிலைக்கு கொண்டு வர வேண்டும் என்று அண்ணா அவர்கள் அன்று சொன்னார்கள்,அன்புத் தம்பிமார்கள் என்று அழைத்தார், ஒரு தாய் வயிற்றில் பிறக்க இடம் இல்லாத காரணத்தினால் தனித்தனி தாய் வயிற்றில் பிறந்த சகோதரர்கள் என்று அண்ணா அவர்கள் சொன்னார், அதைத்தான் உடன்பிறப்பே என்று முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் சொன்னார், கலைஞரின் மகனான முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் பெரியாராக, அண்ணாவாக,கலைஞராக செயல்பட்டு வரும் நமது திராவிட நாயகர்,

சமூக நீதி காவலர்,கழகத் தலைவர், தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உங்களில் ஒருவன் என்று சொல்கிறார், அதே போல் திருச்சபையின் மூலம் நீங்கள் எந்த அளவிற்கு என்னை நீங்கள் நேசிக்கிறீர்களோ அந்த அளவிற்கு உங்களை நான் நேசிக்கிறேன், இங்கு ஒரு சிலர் உரையாற்றும் போது கிறிஸ்தவ மதத்தில் பணம் கொடுத்து சேர்த்து விடுவதாகவும் அதனால் மற்ற மதத்தின் உரிமைகளை பறிக்கப்படுவதாகவும் ஒரு மாயை ஒரு அச்சத்தை சிலர் உருவாக்கி வருகின்றனர் என்ற செய்தியை வேதனையுடன் இங்கு பதிவு செய்தனர், அவர்களுக்கு நான் ஒன்று சொல்ல கடமைப்பட்டுள்ளேன் அவர் அவர்கள் மார்க்கத்தில் இருக்கின்ற உயர்ந்த கோட்பாடு களுக்கு யாரும் எந்த காலத்திலும் ஒரு சிறிதளவு கொச்சைப்படுத்துகின்ற வகையில் செல்ல மாட்டார்கள், மேலும் மதம் மாறிய ஆதி திராவிட மக்களை ஆதி திராவிடர்களாகவே கருத வேண்டும் என்கிற கோரிக்கையை ஒன்றிய அரசாங்கத்திற்கு வலியுறுத்தி தமிழ்நாட்டு சட்டப்பேரவையில் வரலாற்று சிறப்புமிக்க ஒரு தீர்மானம் நிறை வேற்றப்பட்டு உள்ளது என்பதை இந்த நேரத்தில் சொல்ல நான் கடமைப்பட்டுள்ளேன்,

இந்த கோரிக்கை இந்தியாவில் வேற எந்த மாநிலத்திலும் இதனை நிறைவேற்றவில்லை என்பதை தெரிவித்துக் கொள்கிறேன், உரிமைக்கு குரல் கொடுப்போம் என்ற கொள்கையின் அடிப்படையில் நமது தமிழக முதலமைச்சர் இந்தியாவிலே தமிழ்நாடு தான் முதல் தீர்மானம் இயற்றப்பட்டுள்ளது என்ற நல்ல செய்தியை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்,இங்கு வந்து கொண்டிருக்கின்ற அனைத்து சகோதர சகோதரிகளுக்கும் நீங்கள் வைத்த கோரிக்கைகள் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு சென்று அனைத்தும் 100% நிறைவேற்றி தரப்படும் இந்த திருச்சபையில் நீங்கள் அடிக்கடி சொல்வது போல் தட்டுங்கள் திறக்கப்படும் கேளுங்கள் கொடுக்கப்படும் அதுபோல் நீங்கள் கொடுத்த மனுக்களின் கோரிக்கைகள் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் ஆட்சியில் நிறைவேற்றி தரப்படும் என்று பேசினார் மேலும் ஜெருசேலம் செல்வதற்காக நீங்கள் 100 பேர் வேண்டுமென்று சொன்னீர்கள் ஆனால் அதில் ஐந்து மடங்கு உயர்த்தி 500 பேர்கள் ஜெருசேலத்திற்கு செல்வதற்காக நமது திராவிட மாடல் அரசு செயல்படுத்தி உள்ளது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்,அதனைத் தொடர்ந்து செய்தியாளர் சந்திப்பில் துணை முதல்வராக உதயநிதி ஸ்டாலின் எப்போது ஆவார் என்ற கேள்விக்கு முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் உடன் பிறப்பே என்று அழைத்தார் ஆனால் நமது முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உங்களில் ஒருவன் என்று முத்தமிழ் அறிஞர் கலைஞர் எப்படி ஸ்டாலினை படிப்படியாக வளர்த்து, அமைச்சராக்கி அதற்குப் பிறகு துணை முதல்வராக ஆக்கினாரோ அதுபோல, உதயநிதியை அமைச்சராக்கி, பல்வேறு விமர்சனங்களைத் தாண்டி, தற்போது அவரை துணை முதல்வராக உரிய நேரத்தில் முதலமைச்சர் அறிவிப்பார் என்று தெரிவித்தார்.

மேலும், எல்லோருக்கும் எல்லாம் கிடைக்கக்கூடிய ஆட்சிதான் திமுக தலைமையிலான திராவிட மாடல் ஆட்சி.

கடந்த மக்களவைத் தேர்தலில் தமிழகம் மற்றும் புதுவை உள்ளிட்ட 40 தொகுதிகளிலும் திமுக கூட்டணி அமோக வெற்றி பெற்றது. அதுபோல, வரும் 2026 சட்டப்பேரவைத் தேர்தலில் 234 தொகுதிகளிலும் திமுக கூட்டணி அமோக வெற்றி பெறும். திமுக கொள்கைகள் வெற்றிபெறும் என்று அமைச்சர் செஞ்சி மஸ்தான் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் மாவட்ட ஒன்றிய நகர பேரூர் கழக நிர்வாகிகள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், சார்பான நிர்வாகிகள், தமிழ்நாடு கிறிஸ்துவ சபையின் கூட்டமைப்பின் தலைவர்கள் நிர்வாகிகள் உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



அம்பத்தூர் எஸ்டேட் தொழிற்பேட்டையில் 10 புதிய பேருந்துகளின் பயணத்தை ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார். உடன் பி.கே.மூர்த்தி, டி.எஸ்.பி.இராஜகோபால், எம்.டி.ஆர். நாகராஜ், எம்.கமல், க.பொற்கொடி, கண்ணபிரான், தொ.மு.ச. நிர்வாகிகள் பங்கேற்றனர்.

## சென்னை வடகிழக்கு மாவட்ட வர்த்தக அணி சார்பில்

# பேரறிஞர் அண்ணா பிறந்த நாள் விழா - மலரஞ்சலி!

## நிகழ்ச்சி ஏற்பாடு : பிரட் சுரேஷ்! தலைமை : கோமதி சந்தோஷ்குமார்!

சென்னை, செப். 23 -

கழக மாநில இளைஞரணி செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி மாநில மீனவர் அணி துணைத் தலைவர் திருவொற்றியூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் கே.பி.சங்கர் ஆலோசனைப்படி மாவட்ட வர்த்தக அணி சார்பில் மாவட்ட துணைத் தலைவர் பிரட் சுரேஷ் ஏற்பாட்டில் பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்தநாள் விழா நடை பெற்றது.

தாய்நாட்டிற்கு தமிழ்நாடு என்று பெயர் சூட்டிய பேரறிஞர் அண்ணா அவர்களின் 116 வது பிறந்தநாளை முன்னிட்டு திருவொற்றியூர் தொகுதிக்குட்பட்ட எண்ணூர் 2வது வட்டத்தில் மாவட்ட வர்த்தகர் அணி துணை தலைவர் எஸ். சுரேஷ் ஏற்பாட்டில் பேரறிஞர் அண்ணா பிறந்தநாள் விழா 2வது வார்டு மாமன்ற உறுப்பினர் கோமதி சந்தோஷ்குமார் தலைமையில் பேரறிஞர் அண்ணா படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

இந்நிகழ்வில் முன்னாள் பகுதி துணை செயலாளர் இ.ரமேஷ் இ.வி.கருணாநிதி கொடியேற்றி இனிப்புகள் வழங்கினர், முன்னாள் நகர செயலாளர் அ.பாண்டியன் 2வது வட்ட முன்னாள் அவை தலைவர் டி.எஸ். மணி, கே.சந்தோஷ் குமார், ஜெ.திலகர், சிவகுமார், வேலுமணி, தீன், நிர்மலா, மாவட்ட மீனவர் அணி துணை அமைப்பாளர் டி. தேசப்பன், சுந்தரேசன், கழக முருகன், பால்ராஜ், மற்றும் கழகத் தோழர்கள் கலந்து கொண்டு புகழஞ்சலி செலுத்தினர்.



காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், புனித தோமையார் மலை வடக்கு ஒன்றியம், தாம்பரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட முடிச்சூர் ஊராட்சியில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டச் செயலாளரும் அமைச்சருமான தா.மோ. அன்பரசன் ஆலோசனையின்படி ஒன்றியச் செயலாளர் ஜி.கே.ரவி தலைமையில், ஒன்றிய துணைச் செயலாளர் அ. விநாயகமூர்த்தி முன்னிலையில், தி.மு.க. இளைஞரணி உறுப்பினர் சேர்த்தல் கூட்டம் நடைபெற்றது. இதில் சிறப்பு விருந்தினர்களாக ஆதிமாறன் மற்றும் குறிஞ்சி சிவா கலந்து கொண்டனர். இதில் ஒன்றிய துணைச் செயலாளர்கள் செல்வராஜ் ,மஞ்சு ஜெயபால், ஒன்றியப் பொருளாளர் ராஜா, கிளைக் கழக செயலாளர்கள் கே. கந்தசாமி ,வி .ஆர். குமார் ,பி .எஸ் .ரமேஷ், சுனில் மேத்யூ ,கே. சுகுமார், மற்றும் கழக முன்னோடிகளும் இளைஞர் அணி மகளிர் அணி ஆகியோர் கலந்து கொண்டு இக் கூட்டத்தில் சிறப்பித்தனர்



ஆலந்தூர் தெற்கு பகுதி 167 வது வட்டத்தில் வட்டகழக செயலாளர் ஜெ.நடராஜன் தலைமையில் இல்லந்தோறும் இளைஞரணி சேர்க்கும் பணி பகுதிகழக செயலாளரும் 12வதுமண்டல குழு தலைவருமான என். சந்திரன் முன்னிலையில் ஆலந்தூர் தொகுதி இளைஞரணி உறுப்பினர் சேர்த்தல் பணி பொறுப்பாளர் தொமுச பேரவை செயலாளர் இரா.பொன்ராம் மேற்பார்வையில் நங்கநல்லூர் எம்.எம். டி.சி.காலனி, கண்ணன் நகர், லட்சுமி நகர், சிவ லேவியேசன் காலனி, ஐயப்பா நகர், பெரியார் நகர், தெருக்களில் வீதி வீதியாக சென்று இளைஞரணி உறுப்பினர் சேர்த்தல் பணி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் மாவட்ட பிரதிநிதி வெங்கட்ரமணா, சி.கந்தன், இளைஞர் அணி துணை அமைப்பாளர் ப.சீனிவாசன், வீ.சதீஷ், ச.சரவணன், வட்ட கழக நிர்வாகிகள் மு.அரசு,அப்போலோ சுரேஷ், அசோக் குமார், ஞானசேகரன், அண்ணாதுரை, சிவராஜ், வேலு, மெடிக்கல் பாபு,மாரி கண்ணன், அஸ்வின் குமார், ராஜ்குமார், முருகன், சதீஷ்குமார், குருமூர்த்தி, கலந்துக்கொண்டு இளைஞர்களை கழக உறுப்பினர்களாக சேர்த்தனர்.